05.12.2022
அசல் வழக்கு எண்: 245/2014

வா.சா.2 சாட்சி சுப்பாரெட்டி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சுவிகாரம் கொடுக்கப்பட்ட தேதி, மாதம் மற்றும் வருடம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சுவிகார ஆவணத்தில் எத்தனை நபர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விபரமும் யாரெல்லாம் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 சுவிகார ஆவணம் சட்டப்படி ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 2 சுவிகார ஆவணம் சட்டப்படி ஊர்ஜிதத்திற்கு வராததால் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதனை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் என்ன சொல்லப்படுகிறது என்றால் டிரஸ்டு ஆரம்பிக்கபோவதாக சொல்லப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த அறிவிப்பில் டிரஸ்டில் என்னை சேர்ந்துகொள்ளுமாறு சொல்லி இருந்தார்கள் என்றால் சொல்லவில்லை. டிரஸ்டில் என்னை சேர்ந்துகொள்ளுமாறு அறிவிப்பில் சொல்லி இருந்தார்கள் என்றாலும் அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பாததால் நான் சம்மதித்துவிட்டேன் என்று எடுத்துக்கொண்டு டிரஸ்டு

ஆரம்பிக்கப்பட்டது என்றால் நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன். பிரதிவாதிகள் வாதிகள் அனைவருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அனுப்பியது மட்டும் தான் தெரியும்.

எனது தாத்தா சுப்பாரெட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பெண் பிள்ளைகள் ஆவார்கள். அவர்கள் பெயர்கள் என்ன என்றால் பசுபதியம்மாள், லிங்கம்மாள் மற்றும் லெட்சுமியம்மாள் ஆகும். பசுபதியம்மாளின் கணவர் பெயர் ராமசாமி என்றால் சரிதான். ராமசாமி மற்றும் பசுபதியம்மாளுக்கு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். ராமசாமிக்கு 2 வது மற்றும் 3 வது மனைவி உள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி என்பவருக்கு 2 வது மற்றும் 3 வது மனைவி மூலமாக வாரிசுகள் உள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லிங்கம்மாளின் வாரிசுகள் யார் யார் என்றால் சீனிவாசன் மற்றும் ராமநாதன் ஆகும். லெட்சுமியம்மாளுக்கு வாரிசுகள் யார் யார் வாரிசுகள் என்றால் கோபாலகிருஷ்ணரெட்டியார் மற்றும் சுப்புலெட்சுமி ஆகும்.

நான் கோபாலகிருஷ்ணரெட்டியாரின் வாரிசு என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணரெட்டியாருக்கு யாரெல்லாம் வாரிசுகள் என்றால் நான், சுப்புராஜ், பாலசுப்பிரமணியன், ராதாகிருஷ்ணன், பசுபதி மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர்கள் ஆகும். 6 வது வாதி யார் என்றால் எது அம்மா ஆகும். கலாவதி யார் என்றால் 7 வது வாதியை வீட்டில் கலாவதி என்று கூப்பிடுவோம். ஆனால் அவருடைய உண்மையான பெயர் பசுபதி ஆகும்.

சித்திவிநாயகர் கோவிலை பசுபதியம்மாள் உயிருடன் இருக்கும்வரை பராமரித்து வந்தார் என்றாலும் அவருக்கு பின்னால் லிங்கம்மாள் வகையறா பராமரித்தார் என்றாலும் பசுபதியம்மாளுக்கு பிறகு லிங்கம்மாள் பராமரித்தார். லிங்கம்மாளுக்கு பிறகு சுப்பாரெட்டியார் வகையறா பராமரித்தோம்.

சுப்பாரெட்டியார் வகையறா யார் என்றால் சுப்பாரெட்டியார் தத்தெடுத்தினால் நான் வாரிசு ஆவேன். நான் மட்டும்தான் கோவிலை பராமரித்தேனா என்றால் நான் மட்டும் தான் பராமரித்து வந்தேன். எந்த வருடத்திலிருந்து பராமரித்து வந்தேன் என்றால் 2023 ம் ஆண்டிலிருந்து பராமரித்து வந்தேன். சாட்சி தற்போது 2013 ம் ஆண்டிலிருந்து பராமரித்து வந்தேன் என்று கூறுகிறார். லிங்கம்மாள் எந்த ஆண்டு இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த வருடம் பணி ஓய்வு பெற்றேன் என்றால் 2017 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். நான் எந்த காலத்திலும் கோவிலை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் வா.சா.ஆ 6 மற்றும் 12 ஆவணங்களை தவிர மற்ற ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களும் சட்டப்படி கிடைக்ககூடியது அல்ல என்றாலும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.